விவிலியப் படக்கதை - 10

சவுல்



சவுல்

கீசுவின் மகனான சவுல் இஸ்ரயேலின் முதல் அரசராவார். அவரது ஆட்சி இருபது ஆண்டு காலம் (கி.மு. 1030-1010) நீடிக்கிறது. விவிலியத்தின் இருபத்து மூன்று பிரிவுகள் (1சாமு 9-31) சவுல் பற்றிய செய்திகளை நமக்குத் தருகின்றன. நமது படக்கதை இந்தப் பிரிவுகளில் காணப்படும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

சவால்கள் மிகுந்த ஒரு கால கட்டத்தில் சவுல் தம் மக்களின் தலைவராகப் பொறுப்பேற்க அழைக்கப்படுகிறார். ஆபிரகாமின் வழி மரபினருக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டை யோசுவாவின் தலைமையில் இஸ்ரயேலர் கைப்பற்றுகிறார்கள். ஆனால் வலிமைமிக்க பெலிஸ்தியர்கள் அதைத் தமதாக்குகிறார்கள். இஸ்ரயேல் என்ற நாட்டிற்கே ஆபத்து எழுகிறது. இனங்களை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறையும், நீதித்தலைவர்களின் எழுச்சி மிகு தலைமைத்துவமும் பெலிஸ்தியரைத் தடுத்து நிறுத்த போதுமானதாக இல்லை.

சவுல் இறைவனால் அரசராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். குரு அவரை திருப்பொழிவு செய்கிறார். சாதாரண மக்கள் அவரைத் தம் அரசராக ஏற்றுக் கொள்கிறார்கள். சவுல் அக்காலத்திற்குச் சொந்தமானவர். ஆரம்பத்தில் விவசாய தொழில் செய்தவர். வாழ்வின் இறுதி வரை எளிய வாழ்வை ஏற்று வாழ்ந்தவர். மிக நுணுக்கமாக சாமுவேலின் அறிவுரைகளைச் சார்ந்து ஆட்சி செய்கிறார். அரண்மனைகளைக் கட்டவோ, தனக்காக செல்வம் சேர்க்கவோ இல்லை. தம் மக்களை அதிகமாக அன்பு செய்கிறார். அவர்களுக்காக தன் சொந்த உயிரையே துச்சமெனக் கருதி செயல்படுகிறார்.

ஒரு சில விவசாயிகளையும் ஆட்டிடையர்களையும் ஒன்று சேர்த்து ஒரு வலிமைமிக்க இராணுவத்தை உருவாக்குகிறார். பல போர்களில் பெலிஸ்தியர்களை வீழ்த்துகிறார். அவர்களது நாட்டின் பெரும்பகுதியைக் கைப்பற்றுகிறார். அவரது திறமையான தலைமையின்கீழ் இஸ்ரயேல் ஒரு நாடாக மலர்கிறது. எதிர்கால தாவீது, சாலமோன் அரசர்களின் ஆட்சிக்கு அஸ்திவாரமிட்டவர் சவுலாவார்.

தம் படைகளுக்குச் சிறப்பாக தலைமையேற்று போர்க்களத்தில் முன்னேறிச் செல்லும் தைரியம் கொண்டவர் சவுல். படை வீரர்கள் பலர் தன்னைப் பிரிந்து சென்றாலும், தன்னைப் பின்பற்றியவர்களுக்குத் தைரியமூட்டி குறைவான வீரர்களைக் கொண்டே பெலிஸ்தியர்களைத் தோற்கடிக்கிறார். எதிரிகளோடு போர் புரியும்போது இறந்து, தனது வாழ்வையே தம் மக்களுக்காக அர்ப்பணிக்கிறார்.

மறுபுறம் சவுல் ஒரு பரிதாபத்திற்குரியவர். சூழ்நிலைகளுக்குப்


விவிலியப் படக்கதை - 10

சவுல்

எல்பின்


தியோ

யூதேயா மலைநாட்டின் ஒரு கிராமம் கிபயா என அழைக்கப்படுகிறது. இந்தக் கிராமத்தில் பென்யமின் குலத்தைச் சார்ந்த கீசு என்னும் விவசாயி ஒருவர் வாழ்ந்து வருகிறார். ஒருநாள் அவரது சில கழுதைகள் காணாமல் போகின்றன. தன் மகன் சவுலைப் பணியாளருடன் கழுதையைத் தேடும்படி அனுப்புகிறார். சாமுவேல் இறைவாக்கினர் இஸ்ரயேலருக்கு ஒரு அரசரைத் தருவேன் என வாக்களித்ததற்கு சில நாட்களுக்குப்பின் இது நடக்கிறது.




ஆனால் அவருக்குக் கொடுப்பதற்கு நம்மிடம் எதுவுமில்லையே?
என்னிடம் கால் செக்கல் நாணயம் இருக்கிறது. கழுதைக்காக அது போதுமானது.
!!
இங்கு ஒரு இறைவாக்கினர் வசிப்பதாக நாங்கள் கேள்விப்பட்டோம். உங்களுக்கு அவரைத் தெரியுமா?
ஓ! இறைவாக்கினர் சாமுவேலைப் பற்றி நீங்கள் கேட்கிறீர்களா? அவர் நகரில் வசிக்கிறார். மலை உச்சியில் நீங்கள் அவரைக் காணலாம்.
!!
இறைவாக்கினர் சாமுவேலைக் கண்டுபிடிக்க தயவுசெய்து உதவுவீர்களா? நாங்கள் கிபயாவிலிருந்து வருகிறோம்.
நான்தான் சாமுவேல்.
!!


முந்திய நாள் இரவு சாமுவேல் சவுலைப் பற்றி ஒரு காட்சி காணுகிறார்.
இனிமேலும் காணாமல் போன கழுதைகளை நினைத்து வருத்தப்படாதீர்கள். அவை கிடைத்து விட்டன. இன்றிரவு என்னோடு தங்குங்கள். நாளை நீங்கள் திரும்பிப் போகலாம்.
மறுநாள் காலையில்
சவுல் சற்று நேரம் இங்கேயே இரு. உன் பணியாளர் மட்டும் போகட்டும்.
!
?!
யாவே உன்னை இஸ்ரயேலின் அரசராகத் தேர்ந்தெடுத்துள்ளார்.
ஐயா! நான் தகுதியற்றவன். மிகவும் சாதாரணமான ஒரு குடும்பத்திலிருந்து வருகிறேன்.


யாவே குடும்பத்தைப் பற்றி பார்ப்பது கிடையாது. வழியில் நீ மூன்று மனிதர்களைக் காண்பாய். அவர்களுள் ஒருவன் மூன்று ஆடுகளைக் கொண்டு வருவான்.
இரண்டாமவனிடம் மூன்று ரொட்டி துண்டுகள் இருக்கும். மூன்றாமவனிடம் ஒரு இரசச் சித்தை இருக்கும். அவர்கள் உனக்கு இரண்டு ரொட்டி துண்டுகளைத் தருவார்கள். பெற்றுக் கொள்.
நீ கிபயா மலையை அடையும்போது இறைவாக்கினர்கள் உன்னை இசையுடனும், பாடல்களுடனும் வரவேற்பார்கள். கடவுளின் ஆவியானவர் உன்னை ஆட்கொள்வார். அத்தருணத்தில் நீ என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்.
!?

சாமுவேல் முன்னறிவித்ததுபோல எல்லாம் நடக்கின்றன. சவுல் இறைவாக்கினர்களைப் பார்த்ததும், கடவுளின் ஆவியானவர் அவர் மேல் இறங்குகிறார். அவர் ஒரு புது மனிதனாக உருமாற்றம் பெறுகிறார்.

அல்லேலூயா. அல்லேலூயா...
அல்லெல்...
அல்லெல்... ஹல் ஹா ஹா...

இவர் கீசுவின் மகன் சவுல் அல்லவா? அவருக்கு என்ன நடந்தது?

சவுலும் இறை வாக்கினர்களுள் ஒருவரா?

?

சவுலைத் தேடிச் சென்ற அவரது உறவினர் அங்கே வருகிறார்.

சவுல் இவ்வளவு நாட்களாக எங்கே போயிருந்தாய்? நாங்கள் ரொம்ப கவலையாய் இருந்தோம்.

நாங்கள் கழுதைகளைத் தேடிப் பார்க்காத இடமே இல்லை. இறுதியாக இறைவாக்கினர் சாமுவேலைப் பார்க்கச் சென்றோம்.

அவர் என்ன சொன்னார்?

கழுதைகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன எனச் சொன்னார்.

!!


சாமுவேல் கூறியபடி இஸ்ரயேலர் அனைவரும் மிஸ்பாவில் ஒன்று கூடுகிறார்கள்.
நீங்கள் செருக்கும் பிடிவாதமும் உள்ள மக்கள். யாவே உங்களுக்கு ஒரு அரசரைத் தருவார். முதியவர்கள் எல்லாரும் முன்னே வாருங்கள். சீட்டுப் போடுவோம்.
!!
பென்யமின் குலத்தைச் சார்ந்த கீசுவின் மகன் சவுல் மீது சீட்டு விழுந்துள்ளது.
!
கடவுள் உன்னை தம் மக்களுக்கு அரசராக நியமித்துள்ளார். அவரது கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்வதில் உறுதியாயிரு.
!


அரசர் நீடூழி வாழ்க!
பெலிஸ்தியர்கள் ஒழிக! ஒழிக!
கீசுவின் மகன் சவுல் வாழ்க!
!!
!?
சவுல்! யாவே தம் மக்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற உன்னைத் தேர்ந்தெடுத்துள்ளார். நீதியும் இரக்கமும் உனது குறிக்கோளாக இருக்க வேண்டும். ஏழைகளைப் பராமரித்துக் கொள்.
ஆண்டவரே! நான் உமது பணியாளன்.
செல்வங்களைச் சேர்க்காதே. அரண்மனைகளைக் கட்டாதே. உன் மக்களுக்கு தந்தையாக இரு.


சாமுவேல் விடைபெறுகிறார்.
நீங்கள் என்னிடம் கேட்டதையெல்லாம் செய்து முடித்து விட்டேன். நான் யாரிடமாவது கைம்மாறு பெற்றேனா? யாருக்காவது எதிராக தவறிழைத்தேனா? அல்லது அநீதி புரிந்தேனா?
என் குற்றமின்மைக்கு நீங்களே சாட்சியம் கூறியுள்ளீர்கள். ஆனால் நீங்கள் ஒரு பெரிய பாவம் செய்து விட்டீர்கள்.
இல்லை. எங்களுக்கு எதிராக எந்தத் தவறும் இழைக்கவில்லை.
!!!
ஒரு அரசர் வேண்டும் எனக் கேட்டதன் வழியாக நீங்கள் யாவேயை நிராகரித்து விட்டீர்கள். இருப்பினும் அவர் உங்களைக் கைவிடமாட்டார். முழு உள்ளத்தோடு அவரைத் தேடுங்கள்.
!!


கூட்டம் முடிந்தபின் சவுல் வீட்டுக்குத் திரும்புகிறார். ஒரு மாதத்திற்குப்பின்...
நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?
நாங்கள் வடக்கில் கிலயாதிலுள்ள யாபேசிலிருந்து வருகிறோம். அம்மோனியர்கள் எங்கள் நகரை முற்றுகையிட்டுள்ளனர்.
சமாதான ஒப்பந்தம் செய்ய கெஞ்சிக் கேட்டோம். அவர்களும் ஒத்துக் கொண்டார்கள்.
?
அதன்பின் என்ன பிரச்சனை?
அவர்களது நிபந்தனைகளை நீங்கள் கேளுங்கள்! எங்கள் நகரில் வசிக்கும் எல்லோருடைய வலது கண்ணையும் அவர்கள் பிடுங்கி விடுவார்களாம்.
!?
ஏழு நாட்களுக்குள் நாங்கள் அவர்களுக்கு ஒரு பதில் சொல்லியாக வேண்டும்.
கவலைப் படாதீர்கள். யாவே உங்களைக் காப்பார்.

சவுல் தனது காளையைத் துண்டுகளாக வெட்டுகிறார். அதை இஸ்ரயேலர் வாழும் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கிறார்.

சவுலோடு போருக்கு வராமல் இருந்தால் உங்கள் மாடுகளுக்கும் இவ்வாறே நேரிடும்.

???!

சவுலோடு போருக்குச் செல்ல ஒரு பெரிய கூட்டமே முன்வருகிறது.

கிலயாதிலுள்ள யாபேசு முற்றுகையிடப்பட்டுள்ளது. நாளை மறுநாள் அவர்கள் எல்லோரும் கொல்லப்படுவார்கள். நாம் வேகமாகச் செல்வோம். இன்னும் ஐம்பது மைல் தூரம் உள்ளது.


கிலயாதிலுள்ள யாபேசில்
??
நாங்கள் நாளை காலையில் வெளியே வருவோம். உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்.
இன்று ஏழாவது நாள். உங்களுக்கு ஒப்பந்தம் வேண்டுமா இல்லையா?
!?
இஸ்ரயேலர் யோர்தானைக் கடக்கிறார்கள்.
ஆற்றில் குதித்து நீந்துங்கள். வீணாக்குவதற்கு நமக்கு நேரம் இல்லை.
!!!!


சவுல் தன் படையை மூன்றாகப் பிரிக்கிறார்.
நான் எக்காளம் ஊதும்போது நீங்கள் தாக்குங்கள்.
!!!
மதியத்திற்குள் இஸ்ரயேலர் போரில் வெற்றி பெறுகிறார்கள்.
அரசர் சவுல் நீடூழி வாழ்க!
நமக்கு ஒரு அரசரைத் தந்த கடவுளைப் போற்றுவோம்.
நமக்கு ஓர் அரசர் இருக்கிறார் என்பதை நம் பகைவர்கள் தெரிந்து கொள்ளட்டும்.

திரும்பி வரும் வழியில் சவுல் தன் மகன் யோனத்தானிடம் கூறுகிறார்.

போகும் வழியில்தான் பெலிஸ்தியரின் கோட்டையான கெபா இருக்கிறது. அவர்கள் நம்மைத் தாக்கினால் என்ன செய்வது?

!

யோனத்தான் நீ ஆயிரம் வீரர்களுடன் கிபயாவுக்குப் போ. மீதமுள்ள படை வீரர்கள் என்னோடு கில்காலுக்கு வரட்டும். பெலிஸ்தியர்களிட-மிருந்து விலகிப் போங்கள்.


நான் அவர்களைத் தாக்க மாட்டேன். தாக்கினால் விடவும் மாட்டேன்.

?!

வேறு ஒரு வழியில் போ. கில்காலில் பலி கொடுத்தபின் நானும் கிபயாவுக்கு வருவேன்.


கில்காலில் சவுல்
ஏழு நாட்களாக நாம் இங்கே காத்திருக்கிறோம். நாம் பலி கொடுத்துவிட்டு பயணத்தைத் தொடந்தால் என்ன?
இன்று இறைவாக்கினர் சாமுவேல் வந்து பலி நிறைவேற்றுவார்.
அதற்குள் கிபயாவில் இஸ்ரயேலர் யாரும் மீதம் இருக்க மாட்டார்கள்.
!?
கிபயாவிலா? என்ன நடந்தது?
கிபயாவிலிருந்து வந்த இவர்கள் உமக்கு எல்லாவற்றையும் கூறுவார்கள்.
!!
இளவரசர் யோனத்தான் கெபாவில் பெலிஸ்தியரை எதிர்த்துப் போராடினார்.
பின்னர்


கெபாவில் நாம் வெற்றி பெற்றோம். ஆனால் கானானில் உள்ள எல்லா பெலிஸ்தியர்களும் ஒன்று சேர்ந்துள்ளனர்.
அவர்கள் மீண்டும் நம்மைத் தாக்கினார்களா? யோனத்தான் நன்றாக இருக்கிறானா?
!
இதுவரை அவர் நலமாக இருக்கிறார். ஆனால் அவர்கள் எந்நேரமும் நம்மைத் தாக்கலாம்.
நாம் இங்கு வேலையின்றி காத்திருக்கும்போது, பெலிஸ்தியர்கள் நம் பிள்ளைகளைக் கொன்று குவிப்பார்கள்.
இவரைப் பற்றிக் கொண்டே இங்கே இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. நாம் கிளம்புவோம்.
அமலேக்கியரிடம் இருந்து எடுத்து வந்த காணிக்கைப் பொருட்களைக் கொண்டு வாருங்கள்.
!


சவுலின் பலி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சாமுவேல் வருகிறார்.
நிறுத்து. என்ன காரியம் செய்துவிட்டாய்?
!!
!!?
நான் கேட்கும் ஆடுகளின் ஒலியும், மாடுகளின் இரைச்சலும் என்ன?
அவை அமலேக்கியரிடம் இருந்து கொண்டு வரப்பட்டவை.
முதல் தரமான ஆடுகளையும் மாடுகளையும் யாவேக்கு விட்டு வைத்திருக்கிறோம். வீரர்கள் எஞ்சியவற்றை முற்றிலும் அழித்துவிட்டார்கள்.
நீயும் உன் வீரர்களும் யாவே கூறியதை மறந்து விட்டீர்களா?


குருவே, என்னைத் தவறாக எண்ணாதீர்கள். யாவேக்குப் பலி செலுத்தத்தான் இவற்றைக் கொண்டு வந்தோம்.
பலியைவிட கீழ்ப்படிதல் மேலானது என்பது உனக்குத் தெரியாதா?
?
எந்தக் கீழ்ப்படிதலின்மையைப் பற்றி நீங்க பேசுறீங்க? நான் என்ன செய்தேன்?
அகந்தையோடு பேசுகிறாய். யாவே உன்னுடைய அரசப் பதவியை எடுத்து விடுவார்.
!!
நான் குற்றவாளி என்பதை நிரூபிக்காமல் எப்படி எனக்குத் தண்டனை தரமுடியும்? நான் என்ன தவறு செய்தேன்?
கைப்பற்றிய அமலேக்கியரின் உடைமைகளை நீ முழுவதுமாக அழிக்கவில்லை.
!!!
நாம் கிளம்பிச் செல்வோம். இந்த மனிதரால் நம்மைக் காக்கவும் முடியாது, வழிநடத்தவும் முடியாது.
!!!


தயவு செய்து என்னை விட்டுப் போகாதீங்க.
!!!
?!
என்னைத் தொடாதே. யாவே இன்னொருவரை அரசராகத் தேர்ந்தெடுத்துள்ளார்.
!
ஏராளமான வீரர்கள் சவுலை விட்டுப் பிரிந்து செல்கிறார்கள். ஏறக்குறைய அறுநூறு பேர் மட்டும் உடனிருக்கிறார்கள்.
நாம் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறோம் என்பதை எண்ணி மனதைத் தளர விடாதீர்கள். நாம் நமது குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காக போராடுகிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
!?
!!


நான் என்ன தவறு செய்தேன்? நான் என் தந்தையை விட மிக மேலாக சாமுவேலை அன்பு செய்தேன். மதிப்பு கொடுத்தேன். ஏன் என்னிடம் அவர் மிக கொடூரமாக நடந்து கொள்கிறார்?
அழிக்காமல் விட்டதை யாவேக்குப் பலி கொடுக்கத்தானே வைத்திருந்தேன்.
யாவேயின் கட்டளையை மீறி, அவற்றை பலி கொடுத்ததன் வழியாக நான் அவரைக் காயப்படுத்தி விட்டேனா?

கெபாவில் சவுல் பெலிஸ்தியர்களைத் தோற்கடிக்கிறார். அதே நேரம் சாமுவேல் யாவேயின் கட்டளைப்படி பெத்லகேமை அடைகிறார்.

!!

நீங்க அமைதியையா? அல்லது அழிவையா? எதைக் கொண்டு வருகிறீர்கள்?

பயப்படாதீர்கள். நான் பலி கொடுக்க வந்துள்ளேன். இன்று மாலை அனைவரும் அந்த மலையின் மேல் ஒன்று கூடுங்கள்.

பலி கொடுத்தபின் மக்கள் பிரிந்து செல்கிறார்கள். சாமுவேல் ஈசாயின் மகனான தாவீதை அவனது இல்லத்தில் வைத்து திருப்பொழிவு செய்கிறார்.

பெலிஸ்தியர்களுடன் போர் எப்போதும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. எல்லாப் போர்களிலும் சவுல் வெற்றி பெறுகிறார். இருப்பினும் அவர் ஒருவித மன அழுத்தத்தினால் பாதிப்புக்குள்ளாகிறார்.




என்னுடைய கழுதைகள் எங்கே? நான் ரொம்ப காலமாக அவைகளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.
ஆ... யாரது? நீ என் கழுத்தை நெரிக்கிறாயா? யாரது? சாமுவேலா?... நான் உம்மைக் கொல்வேன்.
நம்ம அரசருக்கு என்னவோ ஆகிவிட்டது.
!!
இது பேயும் இல்லை. ஆவியும் இல்லை. இது அவரது மன உளைச்சல்தான். கில்காலில் எப்போது சாமுவேலை விட்டுப் பிரிந்தாரோ அப்போதுதான் இதெல்லாம் தொடங்கியது.
ஏதோ அவருக்கு பேய் பிடிச்சிருக்குதுன்னு நினைக்கிறேன்.

இசை அவருக்குத் தேவையான அமைதியைத் தரலாம் என எண்ணுகிறார்கள். அவர்கள் தாவீது என்ற சிறந்த இசைக்கலைஞனை அழைத்து வருகிறார்கள்.



தாவீது இசையிலே திறமைமிக்கவரும் துணிச்சலுள்ள போர்வீரரும் ஆவார். சவுலுக்கு தாவீதை ரொம்பவும் பிடிக்கிறது. தாவீதை ஒரு படைப்பிரிவின் தளபதியாக்குகிறார். ஆனால் நாளடைவில் அவன்மீது பொறாமை கொள்கிறார்.




இன்றே நான் அவனை விரட்டியடிக்கிறேன். எனக்கு மனம் குழம்பிவிட்டது என்று மக்கள் நினைத்துக் கொள்வார்கள்.
சவுல் ஈட்டியை எறியும்போது தாவீது விலகிக் கொள்கிறார்.
அப்பா, என்ன செய்கிறீர்கள்?
!?
யாரோ ஒருவன் என்னிடம் வாளோடு வந்தான். நான் அவனைச் சுவரோடு வைத்து அறைந்து விட்டேன். அவ்வளவுதான்.
?

சவுல் தன்னை கொலை செய்ய முடிவு செய்ததைக் கண்ட தாவீது தப்பியோடுகிறார்.

நீங்கள் எல்லோரும் அவன் பக்கமே சார்ந்து இருக்கிறீர்கள். அதனால்தான் பல வாரங்களுக்குப் பின்னரும் உங்களால் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவன் நோபு நகரிலுள்ள கோவிலுக்குச் சென்றிருப்பதாக கேள்விப்பட்டோம். குரு அகிமெலக்கு உணவு கொடுத்ததுடன் கோலியாத்தின் வாளையும் கொடுத்தாராம்.

அகிமெலக்கையும் அவரது குடும்பத்தினரையும் உடனே கொண்டு வாருங்கள்.

ஆகட்டும் அரசே.

அகிமெலக்கும் அவரது குடும்பத்தாரும் சவுலின் முன் கொண்டு வரப்படுகிறார்கள்.


அகிமெலக்கு, தாவீதோடு சேர்ந்து கொண்டு ஏன் எனக்கெதிராக சதித் திட்டம் தீட்டினாய்?

தாவீது உங்கள் மெய்க்காப்பாளர்களில் ஒருவன். அவன் உங்கள் எதிரி என்பது எனக்குத் தெரியாது.

நிறுத்தும்! காவலர்களே! இவர்களைக் கொன்று விடுங்கள்.

!!!?

சவுல் தன்னைச் சுற்றி இருக்கும் ஒவ்வொருவர் மீதும் சந்தேகம் கொள்கிறார். பெலிஸ்தியருக்கு எதிராகப் போரிடுவதற்குப் பதிலாக, தாவீதைத் தேடுவதிலேயே தன் சக்தி முழுவதையும் விரயமாக்குகிறார்.




எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கும்போது தாவீது குகைக்குள் நுழைகிறார். சவுலின் அருகிலிருந்த ஈட்டியையும், தண்ணீர்ப்பையையும் எடுத்துச் செல்கிறார்.

மறுநாள் காலை.





சவுல் அவரது படையுடன் திரும்பிச் செல்கிறார். பெலிஸ்தியர்கள் மீண்டும் போருக்குத் தயாராகிறார்கள்.




அன்றிரவு
குருவே சாமுவேல்! எனக்கு வழிகாட்டும்.
ஏன் என்னை இன்னும் தொந்தரவு செய்கிறாய்?
குருவே, எனக்குப் பயமாயிருக்கிறது. பெலிஸ்தியர்கள் நம்மை அழிக்கப் போகிறார்கள். நான் என்ன செய்யவேண்டும்?
நாளை உனது முடிவு தெரியும். யாவே உன்னைக் கைவிட்டுவிட்டார்.

மறுநாள் இஸ்ரயேலர் போரில் தோல்வியடைகிறார்கள். சவுலின் மூன்று புதல்வர்களும் யோனத்தானுடன் சேர்ந்து கொல்லப் - படுகிறார்கள். சவுல் படுகாயம் அடைகிறார்.

!?

!!

எல்லாம் முடிந்துவிட்டது. ஆனால் பெலிஸ்தியர்கள் என்னை உயிரோடு பிடிக்க நான் விடமாட்டேன்.


சவுல் தன் வாளால் தன்னைக் குத்தி, உயிர் விடுகிறார்.



சவுல் மற்றும் யோனத்தானின் இறப்பு இஸ்ரயேலில் மிகப் பெரிய குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இஸ்ரயேலின் எதிர்காலமே அச்சுறுத்தலுக்குள்ளாகிறது. மீண்டும் கடவுள் தாவீது என்ற இடையன் ஒருவனை அரசராக திருப்பொழிவு செய்கிறார். அவரது தலைமையில் எண்ணிப்பார்க்க இயலாத படி மிக விரைவாக மீண்டும் எழுச்சி பெறுகின்றார்கள் இஸ்ரயேலர்.

அடுத்த மாமனிதர்

தாவீது



பாலஸ்தீனம்

கி.மு. 11 ஆம் நூற்றாண்டு

பலியானவர். இஸ்ரயேல் வரலாற்றின் ஒரு திருப்புமுனையில் தேர்ன்றியவர். இனங்களை மையமாகக் கொண்ட ஆட்சியிலிருந்து மன்னராட்சிக்கு மாறும் தருணத்தில் அரசராக அவர் ஆற்றிய பணி மிகவும் சிரமமானது. அரசர் என அவருக்கு ஆதரவாக ஆரவாரம் செய்த மக்கள், பாதுகாப்பிற்காக அவரைத் தேடியவர்கள் தேவையான ஆதரவைக் கொடுக்கத் தவறுகிறார்கள். இவரைத் திருநிலைப்படுத்திய சாமுவேல் கூட தன் ஆதரவை திரும்பப் பெறுகிறார். தாவீதை அரசராகத் திருப்பொழிவு செய்கிறார்.

சாமுவேலோடு ஏற்பட்ட உறவு முறிவு சவுலின் உள்ளத்தைப் பெரிதும் பாதிக்கிறது. ஒருபுறம் சாமுவேல் போதித்த யாவே மதத்தின் நுணுக்கமான சட்டங்கள் மறுபுறம் அக்காலத்தின் தேவைகள். உயர்ந்த இலட்சியங்களையும் அன்றாட நிகழ்வுகளையும் ஒத்துப் போகச் செய்ய அவரால் இயலவில்லை. மன அழுத்தத்திற்கும் பொறாமைக்கும் பலியாகிறார். இறுதியில் அவரால் நண்பர்களையும் எதிரிகளையும் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை. குருக்களைக் கொடூரமாக கொலை செய்ததும், தொடர்ந்து தாவீதைத் துரத்திச் சென்று பலமுறை கொலை செய்ய முயற்சி செய்ததும் அவரை மக்களால் வெறுக்கப்படும் ஒரு அரசராக மாற்றுகிறது. இறுதியாக அவரது வீழ்ச்சிக்கும் இட்டுச் செல்கிறது.

மீட்பு வரலாற்றின் தயாரிப்பிலே சவுலும் ஒரு பங்கு ஆற்றுகிறார். உண்மையில் மெசியாவின் முன்னோடியான தாவீதின் வழியைத் தயாரித்தவர் சவுல் ஆவார். இந்தப் பார்வையிலே இயேசுவின் வழியை ஆயத்தம் செய்த திருமுழுக்கு யோவான் போன்றவர் சவுல் எனலாம்.

கேள்விகள்

1. சவுலின் குலம் எது?
2. சவுல் எப்போது இஸ்ரயேலை ஆட்சி செய்தார்?
3. ஏன் இஸ்ரயேலர் ஒரு அரசர் வேண்டும் எனக் கேட்கிறார்கள்?
4. சவுல் எப்படி அரசரானார்?
5. இஸ்ரயேலரின் பெரிய எதிரி யார்?
6. சாமுவேல் சவுலுக்குக் கொடுத்த அறிவுரை என்ன?
7. இஸ்ரயேலரின் முதல் அரசர் என்பதால் சவுல் எதிர்கொண்ட பிரச்சனைகள் என்ன?
8. இஸ்ரயேல் ஒரு அரசாக மாற சவுல் அஸ்திவாரமிடுகிறார். எப்படி?
9. சவுலின் வீழ்ச்சிக்கான காரணங்களை விளக்குக.
10. மீட்பின் வரலாற்றில் சவுலின் இடம் என்ன?

விவிலியப் படக்கதைகள் (பழைய ஏற்பாடு)

1.காயின்& ஆபேல் 2. ஆபிரகாம் 3. யாக்கோபு 4. யோசேப்பு 5. மோசே 6. யோசுவா 7. சிம்சோன் 8. ரூத்து 9. சாமுவேல் 10. சவுல் 11. தாவீது 12. தாவீது அரசர் 13. சாலமோன் 14. எலியா 15. ஆமோஸ் 16. ஓசேயா 17. மீக்கா 18. எசாயா 19. எரேமியா 20. எசேக்கியேல் 21. செக்கரியா 22. யோனா 23. யோபு 24. தோபித்து 25. தானியேல் 26. சூசன்னா 27. எஸ்தர் 28. யூதித்து 29. மக்கபேயர்-1 30. மக்கபேயர்-2

அடுத்த மாமனிதர்

தன் சொந்த முயற்சியால்
எண்ணிப்பார்க்க இயலாத அளவு
இஸ்ரயேலரை எழுச்சிபெறச்
செய்த ஆட்டிடையர்



தாவீது

First published in English: Fr. Micheal Karimattam, Illustration: Devasy & Benny.
Published in Tamil: Elphin & Theo,
Centre for Biblical Publications, 243, III,Main Road,
Venkatraman Nagar, Hasthinapuram, Chromepet, Chennai 600 064.
Tel : 0091.9840214232, 9159928634, Mail: Celestialpub@yahoo.com.